

மூலமாக சர்வதேச மாணவ மாணவியரை இந்தியாவில் படிக்கத் தூண்டும் வகையில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டம் மூலமாக சர்வதேச மாணவமணிகள் தரமான கல்வியைக் கற்கும் பொருட்டு இந்தியாவின் முன்னணி NAAC & NIRF அங்கீகரித்த கல்வி நிலையங்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.




### இந்தியாவில் பயிலுங்கள்

சர்வதேச கல்வி வானில், இந்தியாவைப் புதிய பரிமாணத்தில் காண்பிக்கும் வகையில் எட்சில், கல்வித்துறை அமைச்சகத்தின் முக்கிய திட்டமான இந்தியாவில் பயிலுங்கள் என்பதை நடைமுறைப்படுத்தி வருகிறது.

உயர்கல்வித்துறை கட்டமைப்பில் இந்தியா உலகின் இரண்டாவது இடத்தை வகிக்கும் சூழ்நிலையில், பிராண்ட் பில்டிங் மற்றும் வர்த்தகப் பரப்புரைகள் ஆகிய செயல்பாடுகள்

### தொழில்நுட்பம் சார்ந்த ஆதரவுக் குழுக்கள் (TSG)

அகில இந்திய அளவிலான மாபெரும் திட்டங்களான Samagara Shiksha, மதிய உணவு, ஆசிரியருக்கான கல்வி, HESPIS, NMEICT, NLMA, NPIU ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான MOE என்பதற்கு இந்த தளம் தொழில்நுட்பம் மற்றும் லாஜிஸ்டிக்ஸ் ஆதரவை நல்கி வருகிறது.






இந்த நிறுவனமானது, 2020 நிதி ஆண்டில் மெச்சத்தக்க அளவில் இந்திய ரூபாய் மதிப்பில் 326 கோடி தொகைக்கு விற்றுமுதல் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. 2016ஆம் ஆண்டிலிருந்து பார்க்கும் போது இது நான்கு மடங்குக்கும் மேலான வருவாய் ஆகும். PBT நிதி ஆண்டு 14-15-ல் இந்திய ரூபாய் 7.10 கோடி தொகை என்பதிலிருந்து நேரிணையான கால அளவில் இந்திய ரூபாய் 56.19 கோடி தொகை என்பதாக அதிகரித்துள்ளது.



எட்சில் EdCIL
Education • Innovation • Transformation

## எட்சில் (இந்தியா) லிமிடெட்

(ஒரு மினி ரத்னா அந்தஸ்து-I, CPSE, இந்திய அரசு நிறுவனம்)


எட்சில் ஹவுஸ், 18 A, செக்டார்-16A, நொய்டா- 201301
EPABX: +91-120-4156001-02, 4154003, 29707206-07 | Fax: +91-120-2970209
இணையதளம்: www.edcilinida.co.in | இ-மெயில்: edcilsupport@edcil.co.in



எட்சில் EdCIL
Education • Innovation • Transformation




# கல்வியில் வியத்தகு மாற்றம். இந்தியா பெற்றிடும் புதிய பரிமாணம்.


## எட்சில் (இந்தியா) லிமிடெட்

(ஒரு மினி ரத்னா அந்தஸ்து-I, CPSE, இந்திய அரசு நிறுவனம்)


ISO 9001:2015 & 14001:2015 சான்று பெற்ற நிறுவனம்



## தொலைநோக்கு

"உயர்ந்த மதிப்பு கொண்ட ஆலோசனை மற்றும் செயல் திட்ட மேலாண்மை நிறுவனமாக கல்வித்துறையிலும் மனிதவளத்துறையிலும் தனித்துவம் மிக்க தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தனிச்சிறப்புமிக்க நுணுக்கங்களையும் சேவைப்பணிகளையும் புத்தாக்க தீர்வுகளையும் வழங்கி வர வேண்டும்.".

## குறிக்கோள்

"உள்நாடு மற்றும் சர்வதேச கிளையண்ட்டுகளுக்கு புத்தாக்க தொழில்நுட்பம் சார்ந்த சேவைப்பணிகள் வாயிலாக, உயர்ந்த அளவிலான செயல்திறன்/அறம் சார்ந்த தரத்தில், கல்வித்துறை மற்றும் மனிதவளத்துறையில் புதுபுது மாற்றங்களைக் கொணர்ந்து விரும்பத்தக்க கல்வித்துறை பணிகள் தலைவராக (employer) ஆக மிளிர்தல்."

## எட்சில் (EdCIL), ஓர் அறிமுகம்


எட்சில் என்பது கல்வித்துறை அமைச்சகத்தின் நிர்வாக கட்டுப்பாட்டில் இயங்கும் மினி ரத்னா-I அந்தஸ்து கொண்ட மத்திய பொதுத்துறை நிறுவனமாகும். இந்த அமைப்பு, ஒட்டு மொத்த கல்வித்துறை மற்றும் மனிதவள மேம்பாட்டு வளர்ச்சி சங்கிலிக்கென்று செயல் திட்ட மேலாண்மை மற்றும் ஆலோசனை சேவைகளில் முழுமூச்சுடன் இயங்கி வருகிறது.

1961ஆம் தொடங்கப்பட்டதிலிருந்து இந்த நிறுவனம் முழுமையான அளவிலான கல்வி செயல் திட்டம் சார்ந்த சேவைப் பணிகளை மத்திய அரசு / மாநில அரசு, மொரிஷியஸ் அரசாங்கம், பொதுத்துறை நிறுவனங்கள், ஐஐடிக்கள், ஐஐஎம்கள், கேந்திரிய வித்யாலயா, ஜவகர் நவோதயா வித்யாலயா ஆகிய தன்னாட்சி அமைப்புகள் ஆகியவற்றுக்கும் வழங்கி வருகிறது. எட்சில் நிறுவனம், கல்வித்துறை பற்றிய முழுமையான அளவிலான செயல் திட்டங்களைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றுள் மொரிஷியஸ் அரசாங்கத்தின் முன்னறாக டிஜிட்டல் கல்வித் திட்டத்தின் கீழ், மொரிஷியஸ் பள்ளி மாணவமணிகளுக்காக 54000 இ-டேப்லட்கள் சப்ளை செய்கிற அமெரிக்க டாலர் 24 மில்லியன் மதிப்பிலான ஆணையும் அடங்கும். எட்சில், 2018ஆம் ஆண்டு, உயர்கல்வியை உலகளவிலானதாக கொண்டு செல்லும் பொருட்டு இந்தியாவில் பயிலுங்கள் (Study in India) என்பதை அறிமுகப்படுத்தியது. மேலும் எட்சில், கடந்த மூன்று ஆண்டுகளாக, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் மாணவமணிகளிடையே உரையாற்றும் பரீட்சா பே சர்ச்சா என்கிற நிகழ்ச்சியை வெற்றிகரமாக நிறைவேற்றி வருவதுடன் கல்வித்துறை அமைச்சகத்தின் பல்வேறு கல்வித்துறை சார்ந்த முனைப்பான நடவடிக்கைகள் குறித்த சமூக வலைதளப் பரப்புரைகளையும் சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.









**நிறுவனமானது தற்போது தங்கள் சேவைப்பணிகளைப் பின்வரும் தளங்களுக்காக வழங்கி வருகிறது :**

### ஆன்லைன் தேர்வு மற்றும் மதிப்பீட்டு சேவைப் பணிகள் (OTAS)

இந்த தளத்தின் வாயிலாக, பள்ளிக்கூட முதல்வர்கள் ஆசிரியர்கள் உள்ளிட்ட பல்வேறு மத்திய / மாநில அரசு / பொதுத்துறை நிறுவனங்களுக்கான / தன்னாட்சி அமைப்புகளுக்கான ஊழியர்கள் பணி நியமனத்திற்காக, ஆன்லைன் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. எட்சில் நிறுவனத்தின் மிகப்பெரிய தளமான இது கிளையண்ட்களிடமிருந்து மகத்தான வரவேற்பைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இதுவரை, எட்சில், 09 மில்லியன் விண்ணப்பதாரர்களுக்கான ஆன்லைன் தேர்வுகளை நடத்தியுள்ளது.

### கல்வி சார் கட்டமைப்பு சேவைப்பணிகள் (EIS)

இந்த தளத்தின் வாயிலாக, பள்ளி மற்றும் உயர்கல்வித்துறை கட்டமைப்புக்கான செயல் திட்ட மேலாண்மை சேவைப் பணிகளையும் முழுமையான அளவிலான சேவைப் பணிகளையும் டர்ன்கீ/கீரீன் பீல்டு மோட் என்கிற வழிமுறையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த தளத்தின் வாயிலாக, தொழிற்கல்விக்கான தீர்வுகள் வழங்கப்படுவதுடன் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக்கூடங்கள்/ உயர்கல்விக்கான ஆராய்ச்சி ஆய்வுக் கூடங்கள் அமைக்கவும் உறுதுணை புரிகிறது.

மேலும், இந்த தளம் வாயிலாக, பரீட்சா பே சர்ச்சா, துருவா ஆகிய நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதுடன் சமூக வலைதளப் பரப்புரை சேவைப் பணிகளும் வழங்கப்படுகின்றன.

### டிஜிட்டல் கல்வி சேவைப்பணிகள் (DES)

டிஜிட்டல் கல்வி வழிமுறை என்பது இந்தியாவில் மிகவும் விரைவாக எழுச்சி பெற்று வருகிறது. மரபு ரீதியான வகுப்பறைக்கு மாற்றாக உருவாகி வருகிறது எனலாம்.

தொழில்நுட்பத்துடன் கூடிய கல்வி வழிமுறையினால், கற்கும் முறையில் மிகப்பெரிய மாற்றம் நிகழ்ந்து எந்த இடத்திலும் எப்போது வேண்டுமானாலும் கற்கும் சூழல் உருவாகியுள்ளது. டிஜிட்டல் கல்வி வழிமுறை ஏற்படுத்தியுள்ள சூழலால், பயிலும் மாணவர், தம்முடைய புரிதலுக்கும் போக்கிற்கும் ஏற்ப படிக்கும் நிலை உருவாகிறது.

எட்சில் இந்தியா லிமிடெட் நிறுவனம், அனைத்து நவீனத் தொழில்நுட்பங்களின் உறுதுணையுடன் மிகுந்த அளவிலான தாக்கத்தை உண்டாக்கும் தனித்துவம் மிக்க தீர்வுகளைக் கல்வி உலகுக்குத் தந்து வருகிறது.

குறிப்பிடத்தக்க முக்கிய சேவைப் பணிகளாவன :
1. இ-டேப்லட் வகுப்பறை மூலம் கற்றல் 2. அடுத்த தலைமுறை டிஜிட்டல் வகுப்பறை 3. தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளத்தக்க டிஜிட்டல் பலகை
4. டிஜிட்டல் ஸ்மார்ட் கேம்பஸ் தீர்வுகள் 5. மின்-கற்றல் தளம் மற்றும் தொடர்பு கொள்ளத்தக்க வகையிலான உள்ளடக்கங்கள். 6. மெய் நிகர் எனப்படும் வெர்ச்சுவல்/டெலி வகுப்பறை குறித்த தீர்வுகள்
7. பல்கலைக்கழகங்கள் மற்றும் பள்ளிக்கூடங்களுக்கான தகவல் தொழில்நுட்பம் மூலமான செயலி (ERP)
8. கிளவுட் ஹோஸ்டிங் என்கிற சேவைப்பணி
9. SEN கற்போருக்கான கற்றல் தீர்வுகள்.

DES, அகில இந்திய அளவில் ஸ்மார்ட் வகுப்பறைகளை நடைமுறைப்படுத்துவதில் மிகுந்த அனுபவம் வாய்ந்தது. மேலும், தேசிய அளவில் முக்கியத்துவம் பெற்ற கல்வி நிலையங்களில் கேம்பஸ் நெட் ஒர்க்கிங் மற்றும் ERP-க்காக, புதிய தொழில்நுட்பம் சார்ந்த செயல்திட்டங்களை நிறைவேற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### அறிவுரை சேவைப் பணிகள் (AS)

இந்த தளம் வாயிலாக, இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் கல்வித்துறைக்காக, நேர்த்தியான அறிவுரை சேவைப்பணிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த தளம், விரிவான செயல்திட்ட அறிக்கை முதல் திட்டமிடல், வியூகத்திட்ட ஆய்வுகள், தாக்க ஆய்வுகள் உள்ளிட்ட பதைரப்பட்ட சேவைப்பணிகள் வழங்கப்படுகின்றன. மேலும், கல்வி சார் தலையீடு, அடையாளம் அறிதல் குறித்த பயிற்சி, மனித வளம் சார் தலையீடு போன்றவையும் இந்த தளத்தில் வடிவமைக்கப்படுகின்றன.

### அயல்நாட்டு கல்வி சேவைப் பணிகள் (OES)

"அயல்நாட்டுக்கல்வி சேவைப் பணிகள் தளமானது, அயல்நாட்டு மாணவர்கள் சேர்க்கை பெறுவதற்கான உறுதுணையையும் இந்தியாவைச் சேர்ந்த பயிற்றுவிப்பாளர்களை அயல்நாடுகளுக்கு அளித்திடும் பணிகளையும் மேற்கொள்கிறது.

### கல்வி சார் கொள்முதல் சேவிப்பணிகள் (EPS)

இந்த தளம் வாயிலாக, வடிவமைத்தல், தகவல் தொழில்நுட்ப சாதனங்கள், அறைகலன்கள் (furniture), ஆய்வக சாதனங்கள், ஒலிஒளி உபகரணம் உள்ளிட்டவை மொத்த ஆக்க செலவையும் சொந்தமாக்கிக் கொள்ளுதல் (TOC) என்கிற அடிப்படையில் கொள்முதல் மற்றும் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் ஆகியவை கையாளப்படுகின்றன.



